Judicial from No.53

(Sec Rule 42)

DEPOSITION OF WITNESS

((Chapter XXIII, Cr.P.C)

**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,**

**திருவள்ளூர் (இ) பூந்தமல்லி**

**அமர்வு வழக்கு எண்.115 /2021**

Depositions of : PW4 (LW5)
solemnly by Tmt.N.Selvi, Translator

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சரவணன் | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | | முகவரி | : | |
| வயது | : | | மாவட்டம் | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 2nd day of February - 2026.

(2ம் எதிரி ஆஜர். 1ம் எதிரிகள் ஆஜரில் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு ஏற்கப்பட்டது)

முதல் விசாரணை=

நான் தற்போது சென்னை காவல் கட்டுப்பாட்டு மையத்தில் பணி செய்து வருகிறேன். கடந்த 04.02.2021 அன்று இரவு அதாவது 05.02.2021 அதிகாலை 2.30 மணியளவில் நான் பணியில் இருந்த போது நொளம்பூர் மங்கள் ஏரி பார்க் அருகே இருவர் சண்டையிட்டு கொள்வதாக ஒரு அழைப்பு வந்தது. நான் இது குறித்து நொளம்பூர் சுற்று காவல் வாகன சார்பு ஆய்வாளர் பத்ரோஸ் என்பவருக்கு தகவல் தெரிவித்தேன். ஆய்வாளர் ரீனா என்பவருக்கும் மைக்கில் தகவல் சொன்னேன். இது குறித்து நொளம்பூர் காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

1, 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–

ஆய்வாளர் என்னை விசாரித்த போது 2.30 மணி என்று சொல்லியுள்ளேனா என்றால் 2.36 மணி இருக்கலாம். அடையாளம் தெரியாத நபர்கள் தான் சண்டை போடுவதாக தகவல் வந்தது. கோரோனா கால கட்டத்தில் அவரவர் செல்போன்களில் தான் பேசுவார்கள் என்றால் இருக்கலாம். இன்னொருவரது போனை வாங்கி பெயர் மாற்றி பேசலாம். எண்.100 க்கு புகார் சொன்னால் திரும்ப அந்த தொலைபேசிக்கு போன் செய்து பிரச்சனை தீர்ந்ததா என்று கேட்பார்கள் என்றால் சரிதான். அன்றைய தினம் ஆய்வாளரிடம் சொல்லிவிட்டதால் திரும்ப போன் செய்து கேட்கவில்லை. கட்டுப்பாட்டு அறை காவல் ஆணையர் கட்டுப்பாட்டில் உள்ளது என்றால் சரிதான். புலன் விசாரணை அதிகாரி கேட்டால் ஒரு பொய்யான ஆவணத்தையும் தயாரித்து கொடுப்போம் என்றால் சரியல்ல. புலன் விசாரணை அதிகார் கேட்டுக்கொண்டதால் அரசு தரப்பிற்கு ஆதவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.